**கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் - 2019**

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 5428-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவு மற்றும் 2016 யூலை 20 ஆந் திகதிய 5800-எல்கே ஆம் இலக்க மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை (யூடிஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராகக் காணப்படுகின்றது. இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 34,912.48 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 257.08 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 7,405.48 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடு | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 13.41 மில்லியன் தொகையான நட்டஈட்டிற்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டியவைகள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்படுதல். | ஏற்பாடெதுவும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்**

கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாண பங்குபற்றும் நகர பிராந்தியங்களின் நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் செயற்திட்டத்தினால் அமுல்ப்படுத்தப்படுகின்றதுடன் அவை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறுகள் | செயற்பாடுகள் | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | தாமதங்களுக்கான காரணங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | கண்டி நகர பிராந்திய நகர்ப்புற தலையீடுகள் | கண்டி மடவல வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம் | கண்டி மடவல வீதி புனரமைப்பிற்கான ஒப்பந்தம் ரூபா 1,614.96 மில்லியன் (ஐ.அ.டொலர் 10.77) மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2016 யூலை 07 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் 24 சதவீத மற்றும் 14 சதவீத முறையே நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்துடன் 2017 செப்தெம்பர் 06 இல் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டதுடன் நிறுத்தப்பட்ட திகதி வரை ரூபா 392.73 மில்லியன் (ஐ.அ.டொலர் 2.62 மில்லியன்) தொகை செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் ரூபா 28.16 மில்லியன் தொகை திருத்த நடவடிக்கைகளிற்காக செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 2 ஆண்டுகளும் 3 மாதங்களும் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் | நேர அட்டவணைகள், செயற்திட்டக் கிரயம் மிகையாக செலவிடப்படுதல். | தெரிவு செய்வதற்கு முன்னர் ஒப்பந்ததாரரின் நிதி மற்றும் பௌதீக இயலளவுகளை மதிப்பீடு செய்ய தவறியமை. | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக 2017 செப்தெம்பர் 06 இல் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. முடிவுறுத்திய நேரத்தில் பௌதீக செயன்முன்னேற்றம் 14.62% ஆகவும் திட்ட செயன்முன்னேற்றம் 53.14% ஆகவும் காணப்பட்டன.<br><br>மேற்படி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட பின்னர் அடுத்த ஒப்பந்ததாரர் மிகுதி வேலையை ஆரம்பிக்கும் வரை கேஎம்டி வீதி பராமரிப்பு வேலை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (ஆர்டிஏ) கையளிக்கப்பட்டிருந்த | செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு செயற்திறன்மிக்க வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | இறுதி வரை ஒப்பந்தத்திற்கான கேள்வி மீண்டும் கோரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் செயற்திட்டத்தால் அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்தன. | | | து. | |
| (ஆ) | கண்டி Multimode போக்குவரத்து ரேர்மினல் புனரமைப்பு | ரூபா 10,500 மில்லியன் (ஐ.அ.டொலர் 65 மில்லியன்) கிரயத்தில் கண்டி Multimode போக்குவரத்து ரேர்மினலின் நிர்மாண வேலைக்கான நிதியீட்டமானது ரூபா 247.19 மில்லியன் செலவிடப்பட்ட பின்னர் செயற்திட்ட காலப்பகுதியினுள் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான காலப்பகுதி காணப்படாததன் காரணமாக சர்வதேச அபிவிருத்தி வங்கியால் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டம் மீள்குடியேற்ற செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் நட்டஈடாக ரூபா 605.40 மில்லியன் கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. | முகாமைத்துவ தவறுகள் காரணமாக முழு செயற்திட்டட நோக்கங்களும் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்ததுடன் இது செயற்திட்ட நிதிகளை விரயமாக்கக்கூடும் | மீள்குடியேற்றம் மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகளில் தாமதங்கள் | இணங்கப்பட்டுள்ளது. தற்போது அமைச்சு மற்றும் ஈஆர்டி உடன் ஆலோசித்து தனியொரு செயற்திட்டமாக கேஎம்ஜரீ இனை அமுல்ப்படுத்துவதற்கு டபிள்யூபீ தீர்மானித்திருந்தது. | செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு செயற்திறன்மிக்க வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (இ) | | கண்டி தர்மசோகா வீதி புனரமைப்பு | கண்டி தர்மசோகா வீதி புனரமைப்புக்கான ஒப்பந்தம் ரூபா 796.43 மில்லியன் (ஐ.அ.டொலர் 5.31 மில்லியன்) மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2016 யூலை 07 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக 2019 யூன் 14 இல் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அத் திகதியிலுள்ளவாறான ஒப்பந்தத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே 66 சதவீதம் மற்றும் 25 சதவீதமாக காணப்பட்டன. | நிர்மாணங்களில் தாமதம் காரணமாக நிர்மாணக் கிரயங்கள் அதிகரிக்கக் கூடியதுடன் செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியிருந்தது. | ஒப்பந்ததாரரின் நிதி மற்றும் பௌதீக இயலளவுகளை மதிப்பீடு செய்ய தவறியமை. | வளங்கள் போதாததன் காரணமாக உப செயற்திட்டத்தின் அடையப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றமானது திட்ட பௌதீக செயன்முன்னேற்றத்திற்கு அதிகளவு பின்தங்கியிருந்ததால் இது ஒப்பந்ததாரர்களின் தவறுகளுடன் அவர்களின் தாமதங்களை சுட்டிக்காட்டியிருந்ததுடன் ஒவ்வொரு மாதத்திலும் தாமதங்களை நிவர்த்தி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு செயற்திறன்மிக்க வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | காலி நகர பிராந்திய நகர்ப்புற இடையீடுகள் | நீர் தேக்கி வைத்திருக்கும் பகுதிகள் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டு வடிகாலமைப்பு முறைமைகளின் முன்னேற்றம் | மொறகொட கால்வாய் கரைகளுடன் சேர்ந்து அமைந்துள்ள வெள்ளக் கட்டுப்பாட்டு புள்ளிகளாக 8 இடங்களை மதியுரை நிறுவனம் இனங்கண்டிருந்தது. ஈரநில முகாமைத்துவத்திற்கான திட்டமொன்றை தயாரிக்கும் பொருட்டு நீர் தேக்கி வைத்திருக்கும் பகுதிகளாக அவ் இடங்களை | முறையற்ற செயற்திட்ட முகாமைத்துவம் காரணமாக செயற்திட்ட கூறின் எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்து கொள்ளப்பட மாட்டாது | காலியிலுள்ள உரிய பொது அதிகாரிகளிற்கு இடையே முறையான ஒருங்கிணைப்பு காணப்படாமை. | உரிய பங்குதார முகவர்களுடன் ஆலோசித்த பின்னர் காலி வடிகாண் முன்னேற்ற இடையீடுகள் மாற்றப்பட வேண்டியிருந்ததுடன் சமூக மற்றும் காணி சுவீகரிப்பு பிரச்சனைகள் காரணமாக | உரிய ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பை பேணி காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வினைத்திறனான செயற்திட்ட |

| | | | |
|---|---|---|---|
| உருவாக்குவதற்கு தேவையான காணிகளை கௌ்வனவு செய்ய செயற்திட்டம் தவறியிருந்தது. அப் பகுதியிலுள்ள உரிய பொது அதிகாரிகளிற்கிடையே முறையான ஒருங்கிணைப்பு காணப்படாததன் காரணமாக காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. காணி சுவீகரிப்பு சிக்கல்கள் காரணமாக காலி நகரத்திலுள்ள 16 வெள்ளக் கட்டுப்பாட்டு வடிகாலமைப்பு முறைமைகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலைமை செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | | தேவையான அபிவிருத்தியை அமுல்ப்படுத்துவதில் காணப்படுகின்ற நடைமுறை சிக்கல்கள் கிடைக்கக்கூடிய கால எல்லையினுள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதை தடுக்கக்கூடும். | முகாமைத்துவ முறைமையை அமுல்ப்படுத்துவதன் மூலம் இனங்காணப்பட்ட பொதுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்து 5 ஆண்டுகள் கடந்த பின்னரும் ஐ.அ.டொலர் 190.57 | நிர்மாணங்களில் தாமதம் காரணமாக நிர்மாணக் கிரயங்கள் | மதியுரை சேவைகளிற்காகவும் வேலைகளிற்காகவும் வழங்கப்பட வேண்டிய உரிய | தற்போதைய செயன்முன்னேற்றத்தை மதிப்பிட்ட பின்னர் மிகுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான நிர்மாணங்கள், பொருட்கள் மற்றும் மதியுரைகளிற்கான 201 ஒப்பந்தங்கள் இனங்காணப்பட்டிருந்தன. செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 91.94 மில்லியன் பெறுமதியான 21 உப செயற்திட்டங்கள் மொத்த ஒப்பந்தப் பெறுமதியின் 45 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தயார்ப்படுத்தலின் கீழ் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் ஐ.அ.டொலர் 21.37 மில்லியன் பெறுமதியான 117 ஒப்பந்தங்களின் நிர்மாண வேலைகள் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயத்துடன் ஒப்பிடும் போது 11 சதவீத குறைவான செயன்முன்னேற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இனங்காணப்பட்ட மொத்த ஒப்பந்தங்களில் ஐ.அ.டொலர் 4.43 மில்லியன் பெறுமதியான 7 ஒப்பந்தங்கள் பெறுகைக் கட்டத்தில் காணப்பட்டன. | அதிகரிக்கக் கூடியதுடன் செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியிருந்தது. | ஒப்பந்தங்களை தெரிவு செய்வதில் பங்குதார முகவர்கள் மற்றும் உரிய அரசாங்க அதிகாரிகளுடன் எஸ்சீடிபி கலந்துரையாட வேண்டியிருந்தது. எதிர்பாராத சிக்கல்கள் காரணமாக ஒப்பந்தத்தை தெரிவு செய்தல் தாமதமடைந்திருந்தது. | நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,452.13 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட மொறகொட எல – பிரதான கால்வாய் புனரமைப்பு ஒப்பந்தத்திற்கான கேள்விகளை ஐந்து நிறுவனங்கள் சமர்ப்பித்திருந்தன. | ஒப்பந்தத்தின் பூர்த்தி செய்தல் காலம் நீடிக்கப்பட வேண்டியிருந்ததன் விளைவாக செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த கால அட்டவணையை இது | எஸ்சீஏபிசீ இடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொறியியல் மதிப்பீடு திருத்தப்பட்டிருந்ததுடன் இத் திருத்தப்பட்ட பொறியியல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு எஸ்சீஏபிசீ ஆல் குறைந்த கேள்வி | கேள்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பீஓகியூ உருப்படிகளின் விலைப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறிப்பிடத்தக்களவு விலை முரண்கள் காரணமாக ரூபா 844.90 மில்லியனிற்கு கேள்வியை சமர்ப்பித்திருந்த குறைந்த கேள்வியாளர் ரீஈசீ ஆல் நிராகரிக்கப்பட்டிருந்தார். ஆகையால் இரண்டாவது குறைந்த கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். எனினும் அத் தீர்மானத்தை பின்பற்றாமல் மதியுரையாளரின் ஒருமைப்பாடின்றி ரூபா 1,039.11 மில்லியன் வரை ஒப்பந்தத்தின் மூல மதிப்பீட்டை குறைத்து நிராகரிக்கப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆகையால் 2019 ஆம் ஆண்டளவில் வேலைகளை நிறைவேற்றுவதற்கு 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக ரூபா 339 மில்லியன் செலவிடப்பட்ட பின்னர் 2019 ஏப்ரல் 11 இல் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | பாதிக்கும். | ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (இ) | 15 மாதங்களினுள் மேற்படி ஒப்பந்தத்தின் மிகுதி வேலைகளை இறுதியாக்கும் பொருட்டு கேள்விகளை கோராமல் நேரடி அடிப்படையில் 2019 யூன் 17 இல் ரூபா 736.02 மில்லியன் தொகைக்கு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பநம் வழங்கப்பட்டிருந்தது. | இந் நிலைமை அரசாங்க பெறுகை வழிகாட்டல்களை மீறுகின்றமைக்கு காரணமாகியிருந்ததுடன் அத்தகைய நடவடிக்கைகள் அரச நிதிகளை தவறாக பயன்படுத்துவதற்கு | விலை ஏற்றங்களை கருத்தில் கொண்டு பொறியியல் மதிப்பீடு திருத்தப்படுகின்றதுடன் எஸ்எல்எல்டிசீ மற்றும் திருத்தம் செய்யப்பட்ட பொறியியல் மதிப்பீடு என்பவற்றின் விலைவீதங்களிற்கிடையேயான | ஒப்பந்தங்களிற்காக நம்பகத்தன்மையானதும் யதார்த்தமானதுமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர் பீஓகியூ உருப்படிகளின் விலைப் பகுப்பாய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனினும் மிகுதி வேலைகளின் பொறியியல் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 463.08 மில்லியன் தொகை மாத்திரமே ஆகும். ஆகையால் ஒப்பந்த பெறுமதியை ரூபா 272.94 மில்லியன் தொகையால் விஞ்சி ஒப்பநதம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் பீஓகியூ உருப்படிகள் சிலவற்றிற்கு கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட விலைகள் 100 சதவீதத்தால் விஞ்சப்பட்டிருந்தன. இது தொடர்பாக செயற்திட்டத்தால் அவை தொடர்பான விலைவீத பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழிவகுக்கின்றது. லேும் செயற்திட்டக் கிரயம் மேலதிகமாக ஏற்படக்கூடும். | வேறுபாடு குறிப்பிடத்தக்களவு காணப்படவில்லை. | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.5(உ) பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நேரடி ஒப்பந்தம் வழங்கப்படக்கூடாத போதிலும் மேற்படி பிரமாணங்கள் பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 156.62 மில்லியனிற்கு கண்டியிலுள்ள தர்மசோகா மாவத்தையில் மண் இட்டு கெட்டிப்படுத்தி சாய்வுத்தன்மையை உறுதிப்படுத்தும் மிகுதி ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தத்தின் பொறியியல் மதிப்பீடு ரூபா 116.60 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும் ரூபா 40.02 மில்லியன் | மேலதிக மதிப்பீடு ஒப்பந்த ஊழலிற்கு வழி வகுப்பதுடன் இது செயற்திட்டத்தின் கிரய செயற்திறனை பாதிக்கும். | இவ் வேலை ஒப்பந்தத்தை வழங்கும் போது பின்பற்றப்பட்ட பெறுகை நடைமுறை சரியானதாகும். அத்துடன் இவ் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பிபிசீ அதிகாரத்தை கொண்டிருந்தது. | சரியானதும் நம்பகத் தன்மையுடையதுமான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் கிரய மதிப்பீடு பகுத்தறிவுள்ளதாக இருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையால் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விஞ்சி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | | | |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்திட்டத்தால் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 1,350 மில்லியன் தொகையாகும். அம் முற்பணங்களில் ரூபா 608.49 மில்லியன் தொகை 3 ஆண்டுகளிற்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. முற்பணங்களை அறவீடு செய்வதற்கு செயற்திட்டம் போதியளவு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக கடனின் கீழ் வழங்கப்பட்ட செயற்திட்ட நிதிகள் அவ்வாறு மேற்கொள்வதற்கு நியாயமான காரணங்களின்றி நீண்ட காலமாக ஒப்பந்ததாரரால் வைத்திருக்கப்படுகின்றது. | இந் நிலைமை அரசாங்க பிரமாணங்களை மீறியிருந்ததுடன் அத்தகைய நடவடிக்கை அரச நிதிகளை மோசடி செய்து தவறாக பயன்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடும் | ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியின் 30% செயன்முன்னேற்றத்தை ஒப்பந்ததாரர் அடைந்துகொள்ளும் வரை அறவீட்டை ஆரம்பிக்க முடியாது. | உடன்படிக்கைகளின் பிரகாரம் முற்பணங்களை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய வளம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| கடனளிக்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 27 சதவீதத்தை | செயற்திட்ட நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்ட செயற்திட்ட | நிதிகளின் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கருத்துரைகளுடன் | கால அடிப்படையில் சீர்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,012.71 மில்லியனிற்கு சமமமான ஐ.அ.டொலர் 55.05 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 5½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூபா 797.85 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.39 மில்லியன் மீதி செயற்திட்ட நடவடிக்கைகளின் மெதுவான செயன்முன்னேற்றம் மற்றும் மோசமான நிதி எதிர்வுகூறல் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்படாமல் விசேட (டொலர்) கணக்கில் காணப்பட்டது. | காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தன. | இணங்கப்பட்டுள்ளது. எனினும் மெதுவான செயன்முன்னேற்றத்திற்கான காரணம் முழு செயற்திட்டக் காலப்பகுதியையும் மேவுகை செய்யும் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டத்தை பாதிக்காது. | ஒதுக்கப்பட்ட நிதிகளை முழுமையாக பயன்படுத்தும் பொருட்டு உள்ளபடியான செயலாற்றலுடன் செயல்நடவடிக்கைத் திட்டங்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 140 பல்வேறு வகைப் பதவிகளை கொண்டிருந்த போதிலும், 03 வருடங்களுக்கும் மேலாக பிரதி செயற்திட்ட பணிப்பாளர்கள், சிரேஷ்ட பொறியியலாளர்கள் மற்றும் 16 உதவி செயற்திட்ட பணிப்பாளர்களின் 12 முக்கிய பதவிகள் உள்ளடங்கிய 43 வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிலிருந்து 78 செயற்திட்ட உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட பதவியணி பற்றாக்குறைகள் செயற்திட்டத்தின் மெதுவான செயன்முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| **கணக்காய்வு விடயம்** | **விளைவு** | **முகாமைத்துவ பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது ரூபா 3,761 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 11 பெறுகைகளை அமுல்ப்படுத்துவதற்கு பட்டியலிட்டிருந்த போதிலும் அப் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியிருந்ததன் விளைவாக செயற்திட்ட | சில பெறுகை நடவடிக்கைகள் மாற்றப்பட்டிருந்ததுடன் ஏனைய சில வேலைகள் செயன்முன்னேற்றத்தில் காணப்படுகின்றன. | கால அடிப்படையில் பட்டியலிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொழிற்பாடுகள் தாமதமடைதல். | |

### 3.6 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மோட்டார் வாகனங்களை வாடகைக்கு பெறுவது தொடர்பாக செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் மாதமொன்றிற்கு ஆகக்கூடியது 2500 கிலோமீற்றர் எல்லை வரை ஓடப்பட வேண்டியதுடன் மேலதிக கிலோமீற்றர்களிற்காக மேலதிக கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். ஆகக்கூடிய 2500 கிலோமீற்றர் எல்லையை விஞ்சாமல் மேலதிகமாக 90,855 கிலோமீற்றர் ஓடியமை தொடர்பாக செயற்திட்டத்தால் ரூபா 4.72 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்டம் மீளாய்வாண்டிற்காக கேள்விகளை கோரியிருக்காததுடன் முன்னைய ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு வாடகை வாகன உரிமையாளர் கம்பனிகளிடமிருந்து சேவைகளை பெற்றிருந்தது. | மோட்டார் வாகனங்களை தவறாக பயன்படுத்தும் சாத்தியத்தன்மை | நட்டங்கள் மற்றும் தவறான பயன்படுத்தல்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மோட்டார் வாகன தொகுதி மற்றும் அவற்றின் கிரயங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்மிக்க வகையிலும் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல். |